IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.
**OS.No. 215/2015**

| **DEPOSITION OF WITNESS** | **DW.1** |
|---|---|

| NAME | **கோவிந்தசாமி** |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.01.2025

**வாதி தரப்பு குறுக்குவிசாரணை**

1. வாதி கோபால் எனது தம்பி ஆவார். 1வது பிரதிவாதி ராஜி கவுண்டர் எனது தந்தை ஆவார். 3 வது பிரதிவாதி வெங்கடேசன் எனது சகோதரரர் ஆவார். 4 வது பிரதிவாதி சாலாம்மாள் எனது தாயார் ஆவார். 5 வது பிரதிவாதி கஸ்தூரி என் தங்கை ஆவார். 6 வது பிரதிவாதி வள்ளியம்மாள் எனது அண்ணன் சொக்கலிங்கத்தின் மனைவி ஆவார். என் அண்ணன் சொக்கலிங்கம் இறந்துவிட்டார்.

2. எனது அண்ணன் சொக்கலிங்கம் வாரிசுகள் 6 முதல் 10 பிரதிவாதிகள் ஆவார்கள். தாவா சொத்துக்கள் வீரசெட்டிபள்ளி கிராமத்திருள்ள விவசாய நிலங்கள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ஆதியில் எனது தகப்பனார் ராஜி கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் அவருடைய பிள்ளைகளுக்கு தனிதனியாக செட்டில்மெணட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். எனக்கும் 2 ஏக்கர் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.சா.ஆ.1 என்றால் சரிதான்.

3. பி.சா.ஆ.1 அசல் ஆவணம் என்னிடம் உள்ளது. அசல் ஆவணத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நகல் ஆவணம் கேட்டதால் தாக்கல் செய்தேன். நகல் ஆவணம் தாக்கல் செய்தது தவறு என்றாலும், அசல் அல்லது சான்றிட்ட நகலை தாக்கல் செய்யாததால் பி.சா.ஆ.1 ஆவணத்தை சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. பி.சா.ஆ.1 ன் அசல் ஆவணத்தை ஏன் தாக்கல் செய்யவில்லை என்று போதுமான காரணத்தையும் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாதி இவ்வழக்கில் ஏ மற்றும் பி அட்டவணை சொத்தை காண்பித்துள்ளார் என்றால் சரிதான். ஏ அட்டவணை சொத்தில் 1 ஏக்கர் 33 செண்டும் 2 ஏக்கர் ஆகிய இரண்டு சொத்துக்களும் எங்களது தகப்பனார் வாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான்,

5. வாதியின் ஏ அட்டவணை சொத்தில் தென்னந்தோப்பு மற்றும் மாந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். சுமார் 400 மாமரம் மற்றும் 200 தென்னை மரங்கள் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏ அட்டவணை சொத்திற்கு அருகில் தான் என்னுடைய சொத்து உள்ளது என்றால் சரிதான். என்னுடைய நிலத்திற்கு அருகிலுள்ள வாதியின் சொத்தில் சுமாராக எவ்வளவு தென்னை மரம் மற்றும் மாமரங்கள் உள்ளது என்ற விவரங்களை என்னால் சொல்ல முடியாது என்றால் அவருடைய நிலத்தில் உள்ள மரங்களை பற்றி எனக்கு எப்படி தெரியும். ஏ அட்டவணை சொத்து பொறுத்து எனக்கும் வாதிக்கும் எந்த பிரச்சனையும் கிடையாது என்றால் சரிதான்.

6. பி அட்டவணை சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 40 செண்ட் என்றால் சரிதான். அதன் பழைய சர்வே எண் 413/2, புதிய சர்வே எண்.423/2 ஏ 2 என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து 4 பாகங்கள் என்றால் சரிதான் எனது தந்தை ராஜ் கவுண்டர், வாதி கோபால் எனக்கு மற்றும் எனது சகோதரர் வெங்கடேசன் ஆகியோர்களுக்கு 4 பாகங்களாகும்.

7. தாவா பி அட்டவணை சொத்தின் 40 செண்ட் நிலத்தில் தான் கிணறு, பம்புசெட், மின்இணைப்பு உள்ளது என்றால் சரிதான். வாதி பி அட்டவணை சொத்தில் தான் வாதி கோபால் போர் போட்டு உள்ளார் என்றால் எனது தந்தை காலமாகி விட்டதால் நாங்கள் 3 பேரும் சேர்ந்து தான் போட்டோம். நாங்கள் 3 நபரும் கூட்டாக சேர்ந்து போர் போட்டோம் என்று சொல்வது தவறு என்றாலும் வாதி கோபால் மட்டும் தான் போர் போட்டார் என்றால் சரியல்ல.

8. எந்த ஆண்டு போர் போடப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் எழுதி வைத்ததுள்ளதை பார்த்தால் தான் தெரியும். எந்த தேதியில் போர் போடப்பட்டது என்பதை நான் ரிக்காடாக எழுதிவைத்துள்ளேன் என்றால் சரிதான். நான் ரிக்காடு எழுதி வைத்துள்ளேன் என்ற விவரங்களை எனது பிரமாண வாக்குமூலத்திலும், பதிலுரையிலும் சொல்லவில்லை என்றாலும் அந்த ரிக்காடுகளை இந்நீதிமன்றத்திலோ, தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. என்னிடம் உள்ள ரிக்காடில் யாரால் போர் போடப்பட்டது என்ற விவரம் உள்ளதா என்றால் நான் ரிக்காடை எழுதவில்லை. போர் எந்த தேதியில் போடப்பட்டது என்ற விவரம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். 3 பேரும் சேர்ந்து தான் போர் போட்டோம் என்பதற்கு என்னிடம் எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான்.

10. போர்ரை எந்த ஊரில் இருந்து யாரால் போடப்பட்டது என்ற விவரம் என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் போர் போடாத காரணத்தினால் தான் அந்த விவரங்களை என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்து வீரசெட்டிபள்ளி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.

11. குட்லவாரிபள்ளி கிராமத்தில் எனக்கு நிலம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு வீரசெட்டிபள்ளி கிராமத்தில் தான் நிலம் உள்ளது. பி அட்டவணை சொத்திலுள்ள மின் இணைப்பு எண்.50 என்றால் சரிதான். இதில் இல்லாமல் மற்றொரு கிணற்றில் மின் இணைப்பு எண்.99 என்று உள்ளது என்றால் சரிதான், அதிலும் எனக்கும் வாதிக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான்.

12. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5 உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். வா..சா.ஆ.5 ஒப்பந்த உறுதிமொழி பத்திரம் என்றால் சரிதான். 24.11.2003 ல் பி அட்டவணை சொத்தில் வாதியை போர் போடுவதற்காக அனுமதி கொடுத்து போடப்பட்ட ஒப்பந்த உறுதிமொழி பத்திரம் என்றால் பி அட்டவணை சொத்தில் போர் போடுவதற்கு நான் அனுமதி தரவில்லை.

13. 24.11.2003 ல் போடப்பட்ட ஒப்பந்த உறுதிமொழி பத்திரம் எதற்காக எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் மின் இணைப்பு எண்.50 ல் வாதி நிலத்தில் போர் போட்டால் அதற்குண்டான மின் இணைப்பை எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுத்தற்கு போடப்பட்ட ஒப்பந்தமாகும். மின் இணைப்பு எண்.99 ன் வாதியின் ஒரு பாகத்தை நான் பணம் கொடுத்து வாங்கிகொண்டேன். அதற்கு வா.சா.ஆ.5 போன்று ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் சரிதான்.

14. அந்த போடப்பட்ட விவரத்தை எனது பதிலுரையிலோ, எனது பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி பதிலளிக்கவில்லை.

15. வா.சா.ஆ.5 ன் அடிப்படையில் வாதி கோபால் தான் பி அட்டவணை சொத்தில் தனது சொந்த செலவில் போர் அமைத்தார் என்றால் 3 பேரும் சேர்ந்து தான் போர் போட்டோம். நாங்கள் 3 பேரும் சேர்ந்து போர் போட்டோம் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஏ அட்டவணை பி அட்டவணை சொத்தில் உள்ள போரில் வாதி தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகிறார் என்றால் 3 பேரும் சேர்ந்து தான் பயன்படுத்தி வருகிறோம்.

16. நாங்கள் 3 பேரும் சேர்ந்து வாதி அமைத்த போரில் தண்ணீர் எடுக்கிறோம் என்று சொல்வது தவறு என்றாலும் வாதி மட்டும் தான் மட்டும தான் தண்ணீர் எடுக்கிறார் என்றால் சரியல்ல. சர்வே எண்.413/1ல் மற்றொரு போர் உள்ளது என்றால் சரிதான். அதுவும் 3 பேரும் சேர்ந்து போட்டதா என்றால் சரியல்ல, அது நான் மட்டும் தான் போட்டது.

17. சர்வே எண்.413/1ல் உள்ள போரில் 3 பேரும் தண்ணீர் பயன்படுத்தி வருகிறார்களா என்றால் அது எனது சொந்த நிலம் அதில் நான் மட்டும் தான் தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகிறேன். சர்வே எண்.413/1ல் போரில் தண்ணீர் எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன்.

18. அதற்கும் பி அட்டவணை சொத்திலுள்ள மின் இணைப்பு எண்.50 யை தான் பயன்படுத்தினேன். சர்வே எண்.413/1ல் உள்ள போருக்கு மின் இணைப்பு எண்.50 யை பயன்படுத்துவதற்கு அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை. சர்வே எண்.413/1ல் உள்ள போரில் தண்ணீர் இல்லை என்று சொல்கிறேனா என்றால் மழை பெய்யும் போது தண்ணீர் இருக்கும். தற்போது தண்ணீர் உள்ளது.

19. சர்வே எண்.413/1ல் உள்ள போரில் எப்பொழுதும் தண்ணீர் உள்ளது என்றாலும் மழை பெய்தால் தான் தண்ணீர் இருக்கும் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. இப்பொழுதும் அதிலிருந்து தான் தண்ணீர் பயன்படுத்தி வருகிறேன் என்றால் சரிதான். மழை பெய்ததால் தண்ணீர் உள்ளது. நான் கெட்ட எண்ணத்தால் சர்வே எண்.413/1ல் உள்ள போரும் அதில் தண்ணீர் உள்ள விவரத்தையும் வழக்கில் சொல்லாமல் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

20. பி அட்டவணை சொத்திலுள்ள போர் வாதியால் போடப்பட்டது என்றாலும் அதில் எனக்கும் மற்றவருக்கும் உரிமை இல்லை என்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்தில் வாதி போர் போடுவதையும் அதை வாதி பயன்படுத்துவதை 3வது பிரதிவாதி வெங்கடேசன் எந்த ஆட்சேபனை செய்யவில்லை என்றால் 3 பேரும் சேர்ந்து தான் பயன்படுத்தி வருவதால் அவர் எந்த ஆட்சேபனை தெரிவிக்கவில்லை.

21. 3வது பிரதிவாதி வாதி தான் போர் போட்டார் என்ற உண்மையால் இவ்வழக்கை எதிர்த்து வழக்காடவில்லை என்றால் சரியல்ல. வாதி எனக்கு எழுதிக்கொடுத்த ஒப்பந்த பத்திரத்தை தாக்கல் செய்தால் தான் தாவா பற்றி உண்மை தெரிய வரும் என்றால் சரியல்ல. வாதி எழுதிக்கொடுத்தாக சொல்லும் ஒப்பந்த பத்திரம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான்.

22. பி அட்டவணை சொத்திலுள்ள போரில் வாதி தண்ணீர் எடுப்பதை நான் தடுத்தேன் என்றால் சரியல்ல, நாங்கள் 3 பேரும் சேர்ந்து தான் பயன்படுத்தி வருகிறோம். எனது முதல் பிரமாண வாக்குமூலத்தில் மற்றும் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- **Thiru.M.N.Rajanandhivarmasiva**
**District Munsif,**
**Gudiyattam.**